[3rd August 1966

திரு. மீ. கலியாணசுந்தரம் : அங்கத்தினருக்குத் தெரிவிப்பது வேறு விஷயம். பத்திரிகைகளுக்கு வெளியிடுவது வேறு விஷயம். பத்திரிகைகளில் வெளியிடுவது என்பது வேறு வேறு வகையில் பயன்படுத்திக்கொள்ளப்படும். அதை ஆட்சேபிப்பதற்காக கனம் அங்கத்தினர்கள் தனிப்பட்ட முறையில் கேட்டால் கூடச் சொல்லக் கூடாது என்பது சரியல்ல.

MR. SPEAKER : Now I want to ask the hon. Member, Sri Kalyanasundaram, one question. Suppose the Hon. Chief Minister had revealed to him that the House was going to meet on 1st August. What would happen if he had told the Press that he got that information from the Hon. Chief Minister?

SRI M. KALYANASUNDARAM : Then, I might be guilty of a breach of privilege.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதுமாத்திரம் அல்ல. என்னைத் தனியாக வந்து சந்தித்த அங்கத்தினருக்குச் சொல்லிவிட்டு, மற்ற அங்கத்தினர்களுக்குத் தெரிவிக்காமல் இருந்தால் அதுவும் கூடத் தவறாக இருக்கலாம். அதனால் தான் அப்படித் தெரிவிப்பதும் கூடச் சரியல்ல என்று சொன்னேன்.

திரு. மி. கலியாணசுந்தரம் : அங்கத்தினர்களுக்குத் தெரிவிக்காமல் சபையைக் கூட்டிவிட முடியாது. அதனால் அங்கத்தினர்களுக்கு ஒன்றும் நஷ்டம் இல்லை.

கனம் சபாநாயகர் : நஷ்டம் இல்லை என்றால் இவ்வளவு நேரம் எதற்காக விவாதம் செய்து கொண்டிருக்கவேண்டும் ?

IV.—ANNOUNCEMENT.

THE MADRAS DISTRICT MUNICIPALITIES BILL, 1966.

MR. SPEAKER : I have to announce to the House that the President of India has given his sanction, under Article 304 (b) of the Constitution, for the introduction in the Madras Legislative Assembly of the Madras District Municipalities Bill, 1966.

I am also to inform the House that the Governor has given his recommendation for the consideration by the Madras Legislative Assembly, of the Madras District Municipalities Bill, 1966.

V.—GOVERNMENT BILL.

THE MADRAS DISTRICT MUNICIPALITIES BILL, 1966.

THE HON. SRI S. M. A. MAJID : Mr. Speaker, Sir, I beg for leave to introduce the Madras District Municipalities Bill, 1966.

MR. SPEAKER : The question is—

'That leave be granted for the introduction of the Madras District Municipalities Bill, 1966.'

The motion was put and carried and leave was granted.

3rd August 1966]

THE HON. SRI S. M. A. MAJID : Sir, I introduce the Bill.

MR. SPEAKER : The Bill is introduced.

VI.—PRESENTATION OF REPORTS.

(1) REPORT OF THE COMMITTEE ON PUBLIC ACCOUNTS ON THE AUDIT REPORT ON THE ACCOUNTS OF THE MADRAS STATE ELECTRICITY BOARD FOR THE YEAR 1958–59 TO 1961–62.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார போர்டின் 1958-59 முதல் 1961-62 வரையுள்ள ஆண்டுகளுக்கான கணக்குகள் குறித்துச் செய்த தணிக்கை அறிக்கைகளின் மீது பொதுக்கணக்குக் குழுவின் அறிக்கையை இந்த மன்றத்தின் முன் நான் வைக்கிறேன்.

(2) REPORT OF THE COMMITTEE ON ESTIMATES ON THE MADRAS RECORD OFFICE.

SRI P. RAMACHANDRAN : Mr. Speaker, Sir, I rise to present the Report of the Committee on Estimates on the Madras Record Office (Second Report).

VII.—MOTION EXPRESSING WANT OF CONFIDENCE IN THE MINISTRY.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத் தலைவர் அவர்களே, என் பெயரிலுள்ள தீர்மானத்தை நான் இப்பொழுது 9-30 a.m முன்மொழிகிறேன் :—

" கீழ்க்கண்ட காரணங்களையும், வேறு சில காரணங்களையும் ஒட்டி கனம் திரு. எம். பக்தவத்சலம் அவர்களின் தலைமையின் கீழ் இயங்குகிற அமைச்சரவையின் மீது இப்பேரவை நம்பிக்கை இழந்துவிட்டது என்பதை இந்தப் பேரவை தெரிவித்துக் கொள்ளுகிறது :—

(1) இந்த அரசாங்கம், பொதுவாக எல்லாப் பண்டங்களின் —குறிப்பாக அன்றாட வாழ்க்கைக்குத் தேவைப்படுகின்ற இன்றியமையாத பண்டங்களின் மிதமிஞ்சிய விலை ஏற்றத்தைக் கட்டுப்படுத்தத் தவறிவிட்டது ;

(2) இந்த அரசாங்கம் இந்த மாநிலத்தில் உணவு நிலைமையைச் சீராக்கவும், விவசாயத்திற்குத் தேவைப்படும் வசதிகளைச் செய்து கொடுக்கவும், விவசாயிகளுக்குத் தேவைப்படும் வசதிகளைச் செய்து தரவும் தவறிவிட்டது ;

(3) இந்த அரசாங்கம் தொழில் நுட்பக் கல்வித் துறைகளுக்கு, குறிப்பாக மருத்துவக் கல்வித் துறைக்கு மாணவ, மாணவியரைத் தேர்ந்தெடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செம்மையான முறையில் செய்யத் தவறிவிட்டது ;

(4) இந்த அரசாங்கம் கோயம்பத்தூரில் மூடிக்கிடக்கும் ஆலைகளைத் திறக்கச் செய்யவும், சென்ற சில திங்கள்களாக வேலையின்றித் தவித்திடும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள தொழிலாளர்களின் துயரத்தை துடைக்கவும் தவறிவிட்டது ;